1981 பிப்ரவரி 5]

15 கி.மீ. தொலைவில் உள்ள சங்கரியில் நெடுஞ்சாலைக்குச் சொந்தமான ஒரு ஓய்வு இல்லமும், இடைப்பாடிக்கு 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஓமலூரில் நெடுஞ்சாலைக்குச் சொந்தமான ஒரு ஓய்வு இல்லமும் இருக்கின்றன. அவைகள் அந்த வட்டாரத்தில் வருகின்ற அதிகாரிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற காரணத்தால், மேற்கொண்டு ஒரு புதிய ஓய்வு இல்லத்தை இடைப்பாடியில் கட்டும் உத்தேசம் இல்லை.

திரு. இ. கணேசன் : தலைவர் அவர்களே, இடைப்பாடியிலே பல அலுவலகங்கள் இருக்கின்றன. அதனால் பல அதிகாரிகள் வந்து தங்குகின்றனர். அவர்களுக்கு வசதிகள் இல்லை. டெலிபோன் வசதிகூட அந்த பயணர் விடுதியிலே இல்லை. அதை ஏற்படுத்தித் தர இயலுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விடுதியே இல்லை, பின்னர் டெலிபோன் எதற்கு . விடுதி கட்டியதற்குப் பின்னால் பார்த்துக் கொள்ளலாம்.

அனாதை இல்லங்கள்.

*வினா எண். 199— திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள அனாதை குழந்தைகள் என்று சொல்லுவதற்காக அவர்களுக்கு வழங்கும் சர்டிபிகேட்டிற்காக ரூபாய் 300 என்று உறுதிபடுத்தியிருக்கும் தொகையை அதிகரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இந்த திட்டம் எப்பொழுது செயல் படுத்தப்படும் ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) தமிழகத்தில் அனாதைக் குழந்தைகள் என சான்றிதழ் வழங்குவதற்காக நிர்ணயம் செய்யப்பட்ட ஆண்டு வருமானம் ரூபாய் 300-ஐ ரூபாய் 1,200 என்று உயர்த்தி ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

(ஆ) உயர்த்தப்பட்ட ஆண்டு வருமான வரம்பு இனி குழந்தைகளை அனாதை இல்லங்களில் சேர்க்கும் பொழுது பின் பற்றப்படும்.

திரு. ப. சுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, எப்போது உயர்த்தப்பட்டது. அதை விரைவிலே செயல் முறைக்குக் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1981 பிப்ரவரி 5

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ் வருமான வரம்பு 300 ரூபாய் என்பது 1955 ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது என்பதாலேயும் இக்குறைந்த வருமான வரம்பினால் பல அனாதைக் குழந்தைகள் சான்றிதழ் பெற முடியவில்லை என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதனால், உலக குழந்தைகள் ஆண்டினை ஒட்டி, சமூக நல இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் பரிந்துரையை ஏற்று, அனாதைக் குழந்தைகள் சான்றிதழ் பெறுவதற்கான ஆண்டு வருமானத்தை 1,200 ரூபாயாக உயர்த்தி 10—7—1980 நாளிட்ட அரசு ஆணை 553-ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் அனாதை என்பதற்கு 300 ரூபாய் வருமானம் இருக்கிறது. குழந்தைகளே அனாதைகள், அவர்களுக்கு வருமானம் எங்கிருந்து எப்படி வரும். ஆகவே அனாதை குழந்தைகள், தாய் தகப்பன் இல்லாத காரணத்தால், மற்ற சொந்தக்காரர்கள் இல்லாத காரணத்தாலும் அதை முன்னிட்டு இந்த நிலையில் இருந்து அது தளர்த்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, அனாதைக் குழந்தைகள் என்றால் தாய் தகப்பன் இருந்தும் பராமரிக்க முடியாமல் இருக்கும் குழந்தைகள்தான். சில பேர்களுக்குத் தாய் மட்டும் இருக்கலாம், தகப்பன் இருக்க மாட்டார். ''விடோட் சில்ரன்'' அப்படி இருந்தாலும் காப்பாற்ற முடியாத நிலையில் இருக்கலாம். அப்படி பாதிக்கப்பட்ட குழந்தைகள் எல்லாம் அனாதைக் குழந்தைகள் எண்ணிக்கையில் வருகிறது.

திரு. வ. சத்தியமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, அனாதைக் குழந்தைகளுக்கு உதவ வேண்டும் என்கிற வகையில் அதற்கான வருமான வரம்பு ரூ. 1,200 என்று உயர்த்தப்பட்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது வரவேற்கக் கூடிய ஒன்றாகும். ஆனால், வருமானச் சான்றிதழ்கள் பெறுவதில் சிலர் நல்ல வருமானம் உள்ளவர்களாக இருந்தாலும், வருமானம் இல்லை என்று சான்றிதழ்கள் வாங்க வாய்ப்புள்ளது. ஆகவே, இந்த அனாதைக் குழந்தைகள் சான்றிதழ்கள் வழங்குவதற்கு முன்பு அதனை ஊராட்சி மக்கள் குழுக்கள் பரிசீலனை செய்து, பின்னர் அதன் மூலம் வழங்கும் வகையில் நடைமுறையைக் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : அது பற்றி அரசு ஆவன செய்யும்.

1981 பிப்ரவரி 5]

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தற்போது அனாதைக் குழந்தைகள் என்று அழைக்கப்படுபவர்களை பராமரிக்கும் இல்லங்களுக்கு ஏற்கனவே டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் ''கருணை இல்லங்கள்'' என்ற பெயரால் அழைக்கப்பட்டன. அதை மாற்றுவதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, அதைப் பற்றிய விவரம் ஒன்றும் என்னிடத்தில் இல்லை. மூலக் கேள்விக்கு தொடர்பு இல்லாத காரணத்தால், தனிக் கேள்வி போடவும்.

* வினா எண். 200—திரு. என். பழனிவேல் மற்றும் திரு. செ. செம்மலை: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அனாதை குழந்தைகளை பாதுகாக்கும் இல்லங்கள் எங்கெங்கு உள்ளன?

(ஆ) அதில் பராமரிக்கப்பட்டு வரும் குழந்தைகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) அரசு அவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு உதவி செய்கிறது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) சென்னை, மதுரை கன்னியாகுமரி மற்றும் சேலம், ஆகிய மாவட்டங்களில் சமூக நலத்துறையால் நடத்தப் படுகின்றன. இதைத் தவிர தனியாரால் 94 இல்லங்கள் அனாதை குழந்தைகளுக்கென நடத்தப்படுகின்றன.

(ஆ)

சென்னை	165
மதுரை	157
கன்னியாகுமரி	54
சேலம்	111

தனியாரால் நடத்தப்படும் இல்லங்கள் 94, அவற்றில் குழந்தைகளின் எண்ணிக்கை 5,185. அது பற்றிய (விவரமான அறிக்கை தனியே அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

*[.. 243—249ம் பக்கத்தில் இணைப்பு 2 ஆக அச்சிடப்பெற்று உள்ளது].